IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.

O.S. No.134/2023

Deposition of Witness for PW2.

Name : திருமதி. சூரிய கலா
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 10.11.2025.

சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.

முதல் விசாரணை

நான் இரணியல் சார் பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் பணியில் இருக்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 கிரய ஆவணத்தில் உள்ள சொத்து இரணியல் சார்பதிவாளர் அலுவலகத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டது ஆகும். அதில் வழிகாட்டு மதிப்பு சதுர மீட்டருக்கு ரூ.1015/– என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படுவது இது சம்பந்தமாக நான் வாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு என்றால், சரிதான். அது வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும வா.சா.ஆ.4 தாவா சொத்தை பொறுத்து பத்திரம் பதிய கூடாது என்று அரசு ஆணை உள்ளதா என்றால், இந்து சமய அறநிலையத்துறையின் சொத்தாக இருக்கும் பட்சத்தில், பதிவு சட்டப்பிரிவு 22 A ன் படி பதிவு மறுக்கலாம். அந்த அடிப்படையில் தான் வா.சா.ஆ.4 ன் பதிவு மறுக்கப்பட்டதா என்றால், அந்த சமயத்தில் நான் சார்பதிவாளர் இல்லை அதனால் அந்த விபரங்கள் எனக்குத் தெரியாது. ஒரு பத்திரத்தின் பதிவு மறுக்கப்படும் போது, பதிவு சட்டம் பிரிவு 72ன் படி மறுப்பதற்கான காரணத்தை பத்திரத்தின் பின்புறத்தில் குறிப்பாணையாக எழுதியோ அல்லது check slip பதிவு மறுத்தளிப்பு ஆணை அளிக்கப்பட வேண்டும் என்றால்,சரிதான். அந்த விபரங்கள் புத்தகம் 2ல் பதிவு செய்யப்பட வேண்டும் என்றால், பதிவு செய்யப்பட வேண்டிய தேவையில்லை. இந்த வா.சா.ஆ.4 ஐ பொறுத்து இவ்வாறு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. எனவே வாதி மாவட்ட பதிவாளரிடம் மேல்முறையீடு செய்யும் வாய்ப்பை

இழந்து விட்டார் என்றால், அந்த பத்திரம் பதிவுக்கு வந்ததா என்றே தெரியவில்லை. வா.சா.ஆ.15 அறிவிப்பில் நான், மேற்படி பத்திரம் பதிவிற்கு வரவில்லை என்று நான் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். எங்கள் தரப்பில் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் பத்திரம் பதிவிற்கு வரவில்லை என்று நாங்கள் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.4 ஐ பொறுத்து நீதிமன்ற அல்லது அரசு சார்ந்த ஜப்தி (Attachment) எதுவும் இல்லை என்றால், அரசு தரப்பில் தடை உள்ளது. இந்து சமய அறநிலையத்துறை உத்தரவு, 21.06.2023 தேதியிட்டது உள்ளது. அவ்வாறு அரசு உத்தரவு எதுவும் கிடையாது என்றால், சரியல்ல. அரசு நிலம் என்றால், Guideline Value ல் மதிப்பீடு காட்டாமல் பூஜ்ஜியம் தான் காட்டும் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தை பதிவு செய்ய கூடாது என பதிவு சட்டம் பிரிவு 22 A or B ல் வரையறுக்கப்பட்ட எந்த ஆணைகளும் இல்லை என்றால், சரியல்ல. எனவே பத்திரத்தை பதிவு செய்ய மறுத்தது முறையற்றது என்றால், சரியல்ல. மேற்படி பத்திரத்தை பதிவு செய்ய வாதிக்கு உரிமை உள்ளது என்றால், சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

நான் இந்த வழக்கில் 6 வது பிரதிவாதி. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ல் வாதி வேல்முருகன் கொடுத்த மனுவின் அடிப்படையில் தான் Clarification க்காக இந்து சமய அறநிலையத்துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.